சுபீட்சம்
SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE
அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
நாள் தோறும் சுபீட்சம் மின்னிதழை பார்வையிட
www.supeedsam.com
செவ்வாய்க்கிழமை 03.01.2023 supeedsam.com supeedsam@gmail.com

## வீட்டைப் பலப்படுத்துமாறு சம்பந்தனுக்கு அறிவுரை:

# முக்கிய தலைவர்கள் நடவடிக்கை!



தற்போதைய காலத்தின் தேவையை உணர்ந்து தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பரந்துபட்ட அமைப்பாக மாற்ற வேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராஜா ஆகியோருக்கு ரெலோ மற்றும் புளொட் தலைவர்களால் கடிதம் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்துக்கு முன்னதாக இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்படும் என்று நம்பகரமாகத் தெரியவருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நிர்வாக ரீதியாக வலுப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் இந்தக் கடிதத்தில் முன்வைக்கப்பட்டவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான பொதுச்சின்னம் மற்றும் கட்சிப் பதிவு தொடர்பிலும் சுட்டிக்காட்டப்படவுள்ளது.

மேலும், தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து ஓரணியாகக் கூட்ட

02 ஆம் பக்கத்தில்...

## மீண்டும் அமெரிக்க குடியுரிமைக்கு முயற்சிக்கும்

# கோட்டா!

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தனது அமெரிக்க குடியுரிமைக்கு மீண்டும் விண்ணப்பித்துள்ளதாக ஆங்கில நாளி

02 ஆம் பக்கத்தில்...



## ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மொட்டு சின்னத்திலேயே போட்டியிடும்



ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைப்பது தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை என ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று(திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், உள்ளாட்சி மன்ற தேர்தலில் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன மொட்டு சின்னத்திலேயே போட்டியிடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அரச காணிகளை கையகப்படுத்துவதை கண்டித்து மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்!



மட்டக்களப்பு மண்மனை வடக்கு பிரதேச செயலக பிரிவு உட்பட்ட சவுக்கடி பகுதியில் சட்டவிரோதமாக அரச காணிகளை சில நபர்கள் கையகப்படுத்துவதை கண்டித்து ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டதுடன் பிரதேச செயலகமும் முற்றுகையிடப்பட்டது.

மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்று பின்னர் அங்கிருந்து மண்முனை வடக்கு பிரதேச செயலகம் வரை கோசங்களை எழுப்பியவாறு சென்று காணி அபகரிப்பு தொடர்பாக பிரதேச செயலாளரிடம் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இதன் போது காணி அபகரிப்புக்கு எதிராக உரிய தீர்வினை தற்போதைய வழங்க வேண்டும் என கோரி பிரதேச செயலாளருடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து பிரதேச செயலாளர் குறித்த இடத்தில் இருந்து செயலகத்திற்குள் சென்றார் இந்த நிலையில் அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பிரதேச செயலகத்திற்கு முன்பாக கோஷங்களை எழுப்பியவாறு உரிய தீர்வு கிடைக்கும் வரையில் இவ்விடத்தை விட்டு செல்ல மாட்டோம் என பிரதேச செயலகம் முன்பாக இருந்தனர்.

இதனைத் தொடர்ந்து இரண்டாவது முறையாக பிரதேச செயலாளர் மற்றும் மட்டக்களப்பு பொலிஸார் உடனடி பிரச்சனை தொடர்பாக மக்கள் உடன் கதைத்த போது

02 ஆம் பக்கத்தில்...

## மக்களுக்கு தீங்கு விளைவிக்கும் யோசனைக்கு அனுமதி வழங்க முடியாது



உத்தேச மின்சார கட்டண உயர்வை முன்னெடுப்பதற்கு இது பொருத்தமான தருணம் அல்ல என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

2023 புத்தாண்டில் திங்கட்கிழமை காலை தமது கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சுதந்திரத்தை இல்லாமல் செய்ய அரசியல் அதிகாரம் பல தடவைகள் முயற்சித்ததா

02 ஆம் பக்கத்தில்...

## புதிய வருடத்தில் அரசாங்கத்தை அமைப்போம் - எதிர்க்கட்சி



புதிய வருடத்தில் அரசாங்கத்தை அமைப்போம் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். புதிய வருடத்திற்கான பணிகளை ஆரம்பித்து வைத்து நேற்று கட்சி அலுவலகத்தில் பேசிய போதே கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார மற்றும் ஹர்ஷன ராஜகருணா ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம் கடமையை பொறுப்பேற்றார்



(துசாந்தன்)

கிழக்கு மாகாணக்கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட அகிலா கனகசூரியம் நேற்று திங்கட்கிழமை தனது கடமைகளை பொறுப்பெற்றுக் கொண்டார்.

கிழக்கு மாகாண ஆளுநரிடம் இருந்து நியமனக் கடிதத்தை நேற்று பெற்றுக் கொண்ட இவர், மாகாணக்கல்வி அலுவலகத்தில் தனது கடமையையும் பொறுப்பெற்றுக் கொண்டார்.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் வலயக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வரும் இவர், கல்வி நிர்வாக சேவை வகுப்பு 1ஐ சேர்ந்த சிரேஸ்ட அதிகாரியும்

02 ஆம் பக்கத்தில்...

## இன்று 12 மணிக்கு நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டம்



மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கான பிரேரணைக்கு அனுமதி கிடைத்தால், நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்ட முன்னெடுக்கப்படும் என தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்தில் மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கான பிரேரணைக்கு அனுமதி கிடைத்தால் போராட்டம் இடம்பெறும் என அதன் அழைப்பாளர் தெரிவித்துள்ளார்.

அதன்படி இன்று (செவ்வாய்க்கிழமை) நண்பகல் 12 மணிமுதல் இரண்டு மணிநேரம் இந்த போராட்டம் நடைபெறும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"
aaDaa Finance 0798000100
Aadaa Finance GmbH
Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO
Eidgenössische Finanzmarktaufsicht Nr.35302
Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com
finma 34598
25605: cicero



MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலைமைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

# தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஏறாவூர் நகர சபையில் ஏமாற்றப்பட்டுள்ளதை சாணக்கியன் எம்.பி உணர்ந்து கொள்ள வேண்டும்

(ஏறாவூர் நிருபர் -நாஸர்)

ஏறாவூர் நகர சபையில் அண்மையில் பதவியிழந்த தவிசாளர் நழீம் அவர்களினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகடைக்காயாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாக சபையின் உபதவிசாளர் அப்துல் வாசித் தெரிவித்துள்ளார்.

கடந்த நிருவாகத்தின் வரவு - செலவுத்திட்டம் தோல்வியடைவதை அறிந்துகொண்ட பின்னர் உபதவிசாளர் பதவி தருவதாக பொய்யான வாக்குறுதியளிக்கப்பட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகளின் வாக்குகள் பெறப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம் காங்கிரஸ் சார்பிலான முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பினால் ஏறாவூர் நகர சபையில் ஏமாற்றப்பட்டுள்ளதை நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அவர்கள் விளங்கிக்கொள்ளவேண்டும் என அவர் சுட்டிக் காட்டினார்.

நகர சபையில் 02.01.2023 நடைபெற்ற விசேட வைபவத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

உப தவிசாளர் வாசித் இங்கு தொடர்ந்து பேசுகையில் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு உப தவிசாளர் பதவி வழங்கும் நல்லெண்ணம் முன்னாள் தவிசாளர் நழீம் அவர்களது குழுவிற்கு இருந்திருந்தால் முன்னாள் உபதவிசாளர் றெபுபாசம் பதவி நீக்கப்பட்ட பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு உப தவிசாளர் பதவியை வழங்கும் வாய்ப்பு இருந்தது. ஆனால் அப்போது அவர்கள் மர்ஹூம் றியாழ் அவர்களையே தெரிவு செய்தார்கள்.

ஆனால் இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகளின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக பகடைக்காயாகப் பயன்படுத்தப்பட்டுள்ளமை வேதனையளிக்கிறது.

எனவே நல்லெண்ணம் மனதிலிருந்து வரவேண்டுமே தவிர வார்த்தைகளில் மட்டும் வரக்கூடாடது. உள்ளூராட்சி மன்றங்கள் இன்று கலையலாம் அல்லது நாளை கலைக்கப்படலாம். அதைப்பற்றி நாங்கள்



கவலைப்படவில்லை. சகோதர இனத்துடன் இணக்கப்பாட்டுடனேயே எமது நிருவாகம் பயணிக்கம் என்று அவர் உறுதியளித்தார்.

அதுமாத்திரமின்றி முன்னாள் தவிசாளர் நழீம் அவர்கள் ஒரு கொந்துறாத்துக் காரர். அவர் இச்சபையினை தனியார் நிறுவனம் போன்று நிருவகித்துள்ளார். அவருக்கு உத்தியோகத்தர்களுடன் பேசும் இங்கிதம் தெரியாது என இங்கு பணிபுரியம் ஊழியர்கள் மனம் நொந்து முறையிடுகிறார்கள். தனிப்பட்ட முறையில் அவரிடம் சம்பளம் பெறுகின்ற ஊழியர்களின் பாணியில் செயற்பட்டுள்ளார் என்றார்.

அரசாங்க நிருவாக சுற்றறிக்கைக்கு அமைவாக இந்த ஆண்டிற்கான கடமைச்செயற்பாடுகளை ஆரம்பம் செய்வதற்கான சத்தியப்பிரமாண நிகழ்வு மட்டக்களப்பு ஏறாவூர் நகர சபையிலும் நடைபெற்றது.

ஏறாவூர் நகர சபையின் பிரதித்தவிசாளர் ஐ. அப்துல் வாசித் தலைமையில்; சபை முன்றலில் நடைபெற்ற இந்நிகழ்வில் சபை அதிகாரிகள் மற்றும் சகல ஊழியர்களும் பங்கேற்றனர்.

தேசியக்கொடியேற்றல் மற்றும் தேசிய கீதம்; இசைத்தலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் சபையின் செயலாளர் எம்எச்எம். ஹமீம் சத்தியப்பிரமாணத்தை வாசித்தார்.

நாட்டிற்காக உயிர்நீத்த படைவீர்களுக்காக இந்நிகழ்வில் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

புதுவருட முத்திரையிடப்பட்ட கேக் வெட்டிய மகிழ்வுடன் சபையின் நிருவாக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஏறாவூர் நகரசபையில் இவ்வாண்டிற்கான வரவு செலவுத் திட்டம் அண்மையில் தோற்கடிக்கப்பட்டதையடுத்து சபையின் தவிசாளர் எம்எஸ். நழீம் பதவி இழந்துள்ளதனால் பிரதித் தவிசாளரின் தலைமையில் இ;வவைபவம் நடைபெற்றது.

# அழகிப்போடி கருணாகரன் 3உவருட அரசசேவையில் இருந்து ஓய்வு



மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மகிழடித்தீவு கிராமத்தில் பிறந்த அழகிப்போடி கருணாகரன் 32வருட அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இலங்கை திட்டமிடல் சேவை உத்தியோகத்தரான இவர், உதவி திட்டமிடல் பணிப்பாளராக ஏறாவூர்பற்று பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய நிலையிலேயே ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார்.

1990இல் பட்டதாரி பயிலுனராக அரசசேவையில் இணைந்து கொண்ட இவர், திட்ட அமுலாக்கல் உத்தியோகத்தராக நிரந்தர நியமனம் பெற்று பின்னர், இலங்கை திட்டமிடல் சேவையில் 1999இல் உள்வாங்கப்பட்டு மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகத்தின் உதவி திட்டமிடல் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

தொடர்ந்து, மண்முனை மேற்கு பிரதேச செயலகம், மாவட்ட திட்டமிடல் செயலகம், காத்தான்குடி பிரதேச செயலகம் போன்றவற்றிலும் உதவி திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றியுள்ளார்.

ஆரம்ப இடைநிலை கல்வியை முதலைக்குடா மகா வித்தியாலயத்தில் கற்ற இவர், உயர்தரக்கல்வியை சிவானந்தா தேசிய பாடசாலையில் பயின்றுள்ளார். யாழ் பல்கலைக்கழகத்தில் வணிகமாணி பட்டத்தினைப் பெற்ற இவர், முதுமாணி பட்டத்தினை மதுரை காமராஜர் கல்கலைக் கழத்திலும் பெற்றுள்ளார்.

புனர்வாழ்வு கழகத்தில் திட்ட கண்காணிப்பு உத்தியோகத்தராக பேராசிரியர் சிவத்தம்பி தலைவராக இருந்த காலத்தில் இவர் கடமையாற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது

# வாழைச்சேனையில் விளையாட்டு மைதானத்திற்கு கனகரேத்தினத்தின் பெயரை பொறிக்க கடும் எதிர்ப்பு

(க.ருத்திரன்)






கோறளைப்பற்று பிரதேச சபையின் பொது விளையாட்டு மைதானத்திற்கு முன்னாள் தவிசாளர் கனகரெத்தினம் அவர்களின் பெயர் பொறிக்கப்பட்ட பெயர்பலகை இடுவதற்கு தவிசாளர் திருமதி சோபா ஜெயரஞ்சித்தினால் ஞாயிற்றுக் கிழமை (1) முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு சகோதார இனத்தவர்கள் விடுத்த கடும் எதிர்ப்பினை தொடர்ந்து குறித்த நடவடிக்கை கைவிடப்பட்டு பிரிதொரு தினத்தில் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவ் மைதானத்திற்கு தனி நபர்களது பெயர் எதுவும் வைக்காமல் முன்பு இருந்தமை போல் பொது விளையாட்டு மைதானம் என பெயர் வைக்கும்படி அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

குறித்த விடயம் தொடர்பாக கேள்வியுற்றவர்கள் மைதானத்திற்கு முன்பாக ஒன்று கூடி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் தவிசாளருடன் வாக்குவாதத்திலும் ஈடுபட்டனர்.

பின்னர் சம்பவ இடத்திற்கு வாழைச்சேனை பொலிசார் வரவழைக்கப்பட்டு கலவரம் ஏற்படாமல் தடுத்தனர். பொலிசார் இரு தரப்பினரின் விடயத்தினை விசாரித்ததன் பின்னர் குறித்த செயற்பாட்டினை நிறுத்தியதுடன் நீதி மன்ற நடவடிக்கையின் பின்னர் பெயர் பலகை இடும் செயற்பாட்டினை மேற்கொள்ளுமாறு தவிசாளரிடம் ஆலோசனை வழங்கினர்.

குறித்த விளையாட்டு மைதானம் புதுக்குடியிருப்பு கிராமசேகர் பிரிவிற்குள் வருவதாகவும் பிரதேச சபையில் முன்னாள் தவிசாளரின் பெயர் மைதானத்திற்கு வைக்கப்படவேண்டும் என சபை தீர்மானம் எடுக்கப்பட்டதனால் இன்று அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தவிசாளர் திருமதி சோபா ஜெயரஞ்சித் தெரிவித்தார்.இருந்தபோதிலும் சட்ட நடவடிக்கையின் பின்னர் மீண்டும் அதே இடத்தில் குறித்த தவிசாளரின் பெயர் பொறிக்கப்பட்ட பெயர் பலகை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் கருத்து தெரிவித்தார்.

## மீண்டும் அமெரிக்க குடியுரிமைக்கு...

தழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ராஜபக்ச தனது குடும்பத்தினருடன் டிசம்பர் 2022 இல் இலங்கையை விட்டு வெளியேறினார், தற்போது விடுமுறையில் டுபாயில் இருக்கிறார்.

அவர் டுபாய் வழியாக அமெரிக்கா சென்றதாக முதலில் தெரிவிக்கப்பட்டது, ஆனால் கோட்டாபய ராஜபக்சவுக்கு அமெரிக்கா செல்வதற்கான விசா இல்லை.

இந்நிலையில் ராஜபக்ச தனது அமெரிக்க குடியுரிமையை மீள வழங்குமாறு அமெரிக்க வெளியுறவுத்துறையிடம் தனது வழக்கறிஞர்கள் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எவ்வாறாயினும், 2019 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட அவர் கைவிட்ட அவரது அமெரிக்க குடியுரிமையை மீட்டெடுப்பதற்கான கோரிக்கை இன்னும் அமெரிக்க அதிகாரிகளால் பரிசீலிக்கப்படவில்லை என்று அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

2022 ஆம் ஆண்டு அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தின் போது இலங்கையில் இருந்து தப்பிச் சென்ற பொது எந்தவொரு நாடும் புகலிடம் வழங்கத் தவறியதையடுத்து, தனது அமெரிக்க குடியுரிமையை மீட்டெடுக்குமாறு கோத்தபய ராஜபக்ச வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அமெரிக்க குடியுரிமைக்கான முன்னாள் ஜனாதிபதியின் முயற்சிகள் இன்னும் வெற்றிபெறவில்லை என்பதை அமெரிக்க தூதரகத்தின் ஆதாரம் உறுதிப்படுத்தியுள்ளது என்று அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## அரச காணிகளை கையகப்படுத்துவதை...

மீண்டும் மக்கள் உரிய முறையில் தீர்வினை எடுக்காவிட்டால் இவ்விடத்தில் இருந்து செல்லமாட்டோம் என்றதனைத்தொடர்ந்து பிரதேச செயலாளர் மீண்டும் அலுவலகத்திற்குள் சென்றார்.

தொடர்ந்து மக்கள் உரிய தீர்வு வழங்க வேண்டும் என கூறி பிரதேச செயலகம் முன்பாக கோஷங்கள் எழுப்பியவாறு இருந்தனர் அதனைத் தொடர்ந்து மூன்றாவது முறையாக பிரதேச செயலாளர் உடன் ஒரு சிலர் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடியனர். கலந்துரையாடலின் போது பிரதேச செயலாளர் குறித்த அரச காணிகளை அபகரிக்கின்ற நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளதாகவும் அப்பகுதியில் மரங்களை வெட்டுகின்ற நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்ட போது மட்டக்களப்பு பொலிஸார் அதற்கு உரிய நடவடிக்கைகளை சரியான முறையில் முன்னெடுப்பார்கள் எனவும் வாக்குறுதி அளித்ததன் பிற்பாடு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அவ்விடத்தில் இருந்து விலகிச் சென்றனர்.

# சம்பிரதாய பூர்வமாக தொழிலாளர்கள் தொழிலை ஆரம்பித்தனர்



(தலவாக்கலை பி.கேதீஸ்)

ஹேலீஸ் கம்பனியின் கீழ் இயங்கும் நானுஓயா சமர்செட் ஈஸ்டல் தோட்டத் தொழிலாளர்கள் நேற்று (2) சம்பிரதாய பூர்வமாக தங்களது தொழிலை ஆரம்பித்தனர். இதன்போது தோட்ட அதிகாரி கோசல விஜேசேகர, உதவி முகாமையாளர் ஹிருண, தலைமை வெளிக்கள உத்தியோகத்தர் வசந்த யாப்பா பண்டார ஆகியோரால் தேயிலை கொழுந்து பறிக்கப்பட்டு சம்பிரதாய பூர்வமாக தொழிலாளர்கள் தொழிலை ஆரம்பித்தனர்.

## வீட்டைப் பலப்படுத்துமாறு சம்பந்தனுக்கு...

மைப்பை விரிவுபடுத்தி பயணிக்க வேண்டும் என்றும், அதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுக்கவேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்படவுள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பிய கடிதம், ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பிய கடிதம், ரணில் அரசின் சர்வகட்சிக் கூட்டத்தில் நிலைப்பாடு எடுக்கும் விவகாரம் என அனைத்து விடயங்களிலும் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒற்றுமையாகச் செயற்பட்டுள்ள நிலையில் அதனைத் தொடர்ந்து ஒன்றித்து - ஓரணியாக - ஒரே கூட்டமைப்பாகக் கொண்டு செல்ல வேண்டியதன் தேவைப்பாடு குறித்தும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்படவுள்ளது.

மேலும் உருவாக்கப்படும் கூட்டு தனித்துத் தேர்தலுக்காக மாத்திரம் இல்லாமல் தொடர்ந்தும் அது அவ்வாறானச் செயற்பட வேண்டும் என்றும் கடிதத்தில் சுட்டிக்காட்டப்படவுள்ளது எனவும் தெரியவருகின்றது.

## மக்களுக்கு தீங்கு விளைவிக்கும்...

கவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மக்களுக்கு தீங்கு விளைவிக்கும் பிரேரணைக்கு அமைச்சரவை பச்சைக் கொடி காட்டினால், அந்த முடிவை நிராகரிக்க தயங்கப் போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளின்படி கட்டண உயர்வு கோரப்பட்டால், அது பரிசீலிக்கப்படும் எனவும் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஒரு சவாலான தருணத்தில் உள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்...

ஆவார்.

கல்வி நிர்வாக சேவையில் 1999ஆம் ஆண்டு தை மாதம் இணைந்து கொண்டுள்ளார். 24வருடங்களாக கல்வி நிர்வாக சேவையில் சேவையாற்றி வரும் இவர், கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் நீண்ட காலமாக திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றியுள்ளதுடன், மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி உள்ளார்.

2017ம் ஆண்டு மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் வலயக்கல்விப் பணிப்பாளராக நியமனம் செய்யப்பட்டார் இன்று வரை கடமையாற்றி வருகின்றார்.

2017இல் 98கல்வி வலயங்கள் இலங்கையில் காணப்பட்டன. தேசிய பொதுப்பரீட்சைகளில் குறித்த மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் 98ஆவது கல்வி வலயமாக காணப்பட்டுள்ளது.

குறித்த வலயக்கல்விப் பணிப்பாளரின் புதிய திட்டங்களின் ஊடாக மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் 2021ம் ஆண்டிற்கான தேசிய கல்விப்பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சைதரப்படுத்தலில் 43ஆவது இடத்தினைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த கல்வி வலயத்தில் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. கணித அடைவு மட்டத்தினை அதிகரிக்கும் பொருட்டு இலகு கையேடுகள், சகபாடி கற்றல் செயற்பாட்டையும், பாடசாலையில் மெல்ல கற்கும் மாணவர்களின் வரவு மற்றும் ஆற்றலை விருத்தி செய்யும் பொருட்டு விளையாட்டு, சித்திரம், கலை போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுத்தல் செயற்றிட்டத்தினையும் அறிமுகப்படுத்தி இருந்தார்.

மேலும், மூன்றுகட்ட அலகுப்பரீட்சை, பாடசாலைகளை இணைத்த கருத்தரங்குகள், சாதாரணதர, உயர்தர மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள் தயாரித்து பரீட்சை நடாத்துதல், மாணவர் சந்திப்பு, பெற்றோர் சந்திப்பு போன்றவற்றை பாடசாலைகள் தோறும் நடாத்துதல், திறன் வகுப்பறை விஸ்தரிப்பு, வலய, கோட்ட மட்டத்திலான இணைப்பாட விதான செயற்பாட்டு முகாம்கள் போன்ற பல்வேறு செயற்றிட்டங்களை செயற்படுத்தியுள்ளார்.

மேலும், புதிதாக சூப்பர் ஜீனியர் ப்ரைன் போட்டியையும் அறிகப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆசிரியர்களது வாண்மை விருத்தியை அதிகரிக்கும் நோக்கோடு ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட பயிற்சியையும், வெளிநாட்டவர்களைக் கொண்டு நடாத்தியிருந்தமை எடுத்துக்காட்டத்தக்கது. முக்கிய பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு தொண்டு நிறுவனங்கள், அமைப்புக்கள், தனிநபர்களின் உதவியுடன் இதனை தற்காலிகமாக இவர் நிவர்த்தி செய்யுள்ளார்.

## காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற புதிய ஆண்டில் கடமைகளை பொறுப்பேற்க்கும் சத்தியப்பிரமாண நிகழ்வு





**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்) மட்டக்களப்பு**

புதுவருடத்தினை முன்னிட்டு அரச உத்தியோகத்தர்கள் கடமைகளை பொறுப்பேற்கும் நிகழ்வு நேற்று (02) நாடளாவிய ரீதியில் இடம்பெற்றதுடன் காத்தான்குடி பொலிஸ் நிலையத்திலும் கடமைகளை பொறுப்பேற்கும் சத்தியப்பிரமாண நிகழ்வு காலை 9.00 மணிக்கு பொலிஸ் நிலைய வளாகத்தில் இடம்பெற்றது.

காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயனசிறீ தலைமையில் சத்தியப்பிரமாணம் செய்து 2023 புதிய ஆண்டில் தமது கடமைகளை பொலிஸார் பொறுப்பெற்றுக் கொண்டனர்.

## நுவரெலியா மாவட்ட போது வைத்தியசாலையில் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் பிரிவு

**தலவாக்கலை பி.கேதீஸ்**

நுவரெலியா மாவட்ட பொது வைத்திசாலையில் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் பிரிவு ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்ட பொது வைத்திசாலையில் அமைக்கப்பட்டிருந்த கட்டணம் செலுத்தும் வார்ட் ( PAYING WARD) உத்தியோக பூர்வமாக இன்று (2) திங்கட்கிழமை நணபகல் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளரும் விசேட வைத்திய நிபுணருமான மகேந்திர செனிவிரட்னவினால் திறந்து வைக்ககப்பட்டது. இந்நிகழ்வில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலை விஷேட வைத்திய நிபுணர் ரவி திஸாநாயக்க மற்றும் வைத்தியர்கள், வைத்தியசாலை அதிகாரிகள், வைத்தியசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் என பலரும் கலந்துக் கொண்டனர்.





## கிழக்கு மாகாண சபை வளாகத்தில் இடம்பெற்ற சத்தியப் பிரமாண நிகழ்வு

**(அபு அலா )**



2023 ஆம் ஆண்டின் அரசாங்க சேவை சத்தியப் பிரமாணம் செய்யும் நிகழ்வு நேற்று (02) காலை கிழக்கு மாகாண சபை வளாகத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் (திருமதி) கலாமதி பத்மநாதன் தலைமையில் இடம்பெற்ற இச்சத்தியப் பிரமாண நிகழ்வின்போது, நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த படைவீரர்களுக்கும் ஏனையவர்களுக்குமாக 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு, 2023 ஆம் ஆண்டின் அரச ஊழியர்களுக்கான சத்தியப் பிரமாணத்தையும் செய்து வைத்தார்.

அதயடுத்து அவர் அங்கு உரையாற்றுகையில், வரலாற்றில் முன்னொரு போதும் அனுபவித்திராத பொருளாதார நெருக்கடிக்குள் மக்களின் வாழ்க்கை மிகவும் கஷ்ட நிமைலைக்குள்ளாகியுள்ளது. இக்காலப் பகுதியில், உலகில் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்த நாடுகள் அந்தச் சவால்களை வெற்றி கொள்வதற்கு அறிமுகப்படுத்திய மறுசீரமைப்புக்கள் பற்றிய அனுபவங்களை ஆராய்ந்து அரச சேவையில் தேவையான மறுசீரமைப்புக்களை அறிமுகப்படுத்துவதற்கும், அரச செலவுகளைக் குறைத்து அரச வருமானத்தை அதிகரிப்பதற்கும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படல் வேண்டும் என முதலமைச்சின் செயலாளர்

2023 ஆம் ஆண்டில் சமூக, பொருளாதார எதிர்பார்ப்புகளை அடைந்து கொள்ளும் ஒருமித்த எண்ணத்துடன் அனைத்து அரச ஊழியர்களும் அரச வளங்களை வினைத்திறனாக முகாமைத்துவம் செய்து நிகழ்கால மற்றும் எதிர்காலப் பரம்பரையினரின் நல்வாழ்வுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றும் மனப்பாங்கு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வதன் அவசியம் பற்றியும் இதன்போது வலியுறுத்தினார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாண பொதுச்சேவைகள் அணைக் குழுவின் செயலாளர், உதவிச் செயலாளர்கள், சிரேஷ்ட உதவிச் செயலாளர்கள், சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர், சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு திணைக்கள மாகாண ஆணையாளர், அமைச்சின் மற்றும் திணைக்களங்களின் கணக்காளர்கள், திட்டமிடல் பணிப்பாளர்கள், நிருவாக உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கொண்டனர்.

## மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் நடாத்திய சூப்பர் ப்ரைன் ஜூனியர் போட்டியில் முனைக்காடு விவேகானந்த மகா வித்தியாலயம் முதலிடம்





மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் நடாத்திய சூப்பர்ப்ரைன் ஜூனியர் போட்டியில் முனைக்காடு விவேகானந்த மகா வித்தியாலயம் முதலிடத்தினை பெற்றுக் கொண்டுள்ளது.

மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்வி பணிப்பாளர் அகிலா கனகசூரியம் தலைமையில் ஆரம்பமான குறித்த போட்டியில் வலயத்திற்குட்பட்ட ஐந்து பாடசாலைகள் பங்கேற்றிருந்தன.

இறுதிப்போட்டிக்கு முனைக்காடு விவேகானந்த மகா வித்தியாலய குழுவும் மகிழடித்தீவு சரஸ்வதி மகா வித்தியாலய குழுவும் தெரிவு செய்யப்பட்டு, மொத்த புள்ளிகளின் அடிப்படையில் முனைக்காடு விவேகானந்த மகா வித்தியாலயம் முதலிடத்தினையும், மகிழடித்தீவு சரஸ்வதி மகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டது.

இலுப்படிச்சேனை அம்பாள் வித்தியாலயம் 3ஆம் இடத்தினையும் பெற்றுக்கொண்டது. போட்டியில் பங்கேற்ற அனைத்து மாணவர்களுக்கும் பெறுமதியான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. வலய வரலாற்றில் நவீன தொழிநுட்பத்தை பயன்படுத்தி நிகழ்நிலையில் நடாத்தப்பட்ட முதலாவது போட்டி இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பட்டிருப்பு வலய கல்வி பணிப்பாளராக மகேந்திரகுமார் பதவியேற்பு

**( வி.ரி. சகாதேவராஜா)**



பட்டிருப்பு வலயக்கல்வி பணிமனையின் புதிய வலயகல்வி பணிப்பாளராக செபமாலை மகேந்திரகுமார் நேற்று (2) திங்கட்கிழமை கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

ஏலவே கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளராகவிருந்த திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் இதே பட்டிருப்பு வலய கல்வி பணிப்பாளராகவும் கடமையாற்றி நேற்று முன்தினம் ஓய்வு பெற்றதனால் வெற்றிடமேற்பட்டது.

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் 1 ஐச்சேர்ந்த இவர் இதுவரை அதே வலயத்திலே பிரதி கல்வி பணிப்பாளராக கடமை ஆற்றி வந்தார்.

மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரி அதிபராகவும் ,கிழக்கு மாகாண கல்வி திணைக்களம், திருக்கோவில் , மட்டக்களப்பு மேற்கு, பட்டிருப்பு ஆகிய வலயங்களில் பிரதிக் கல்வி பணிப்பாளராக கடந்த 15 வருடங்களாக பணியாற்றி வந்தவர்.

இன்று முதல் வலயக்கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்ற செபமாலை மகேந்திரகுமார் பாண்டிருப்பைச் சேர்ந்தவராவார்.

இன்றைய பதவியேற்பு விழாவில் கல்வி அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## ௨0௨3 ம் ஆண்டுக்கான புது வருட சத்தியப் பிரமாண நிகழ்வு





**(ஹஸ்பர்)**

புது வருடத்தின் 2023 ம் ஆண்டின் சத்தியப் பிரமாண நிகழ்வு தம்பலகாமம் பிரதேச செயலகத்திலும் நேற்று(02.01.2023) இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம் பெற்ற குறித்த நிகழ்வில் பதவி நிலை உத்தியோகத்தர்கள் உட்பட சக உத்தியோகத்தர்களும் இதன் போது உறுதி மொழி எடுத்துக் கொண்டனர். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சட்ட திட்டங்களை மதித்து மக்களுக்காக கடமையாற்றுவது தொடர்பில் சத்தியப் பிரமாணக் குறிப்பில் உறுதி மொழி எடுத்துக் கொண்டனர்.

இதனை தொடர்ந்து சர்வமதத் தலைவர்களின் பங்கேற்புடன் புதிய ஆண்டிற்கான மத அனுஷ்டானங்களுடன் பணியினை முன்னோக்கிச் செல்ல உத்தியோகத்தர்கள் உறுதி பூண்டுள்ளனர்.

இதன் போது உரையாற்றிய பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி அவர்கள் இந்த புதிய ஆண்டில் அனைவருக்கும் புது வருட வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் உத்தியோகத்தர்களாகிய நீங்கள் மக்களுக்காக தங்களது சேவைகளை திறம்பட முன்னெடுக்க வேண்டும் இதற்காக அனைவரதும் ஒத்துழைப்புக்களை வேண்டி நிற்பதுடன் சில சந்தர்ப்பங்களில் கள உத்தியோகத்தர்கள் கள நடவடிக்கைகளின் போதும் குழுவாக இணைந்து கடமையாற்ற வேண்டும் தங்களின் சிறப்பான பணி மக்களுக்காக என்றும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும் என மீண்டும் இந்த புது வருடத்தில் வாழ்த்துகிறேன் என்றார்.

## மன்னார் மாவட்ட செயலகத்தில் சம்பிரதாய முறைப்படி கடமைகள் ஏற்பு







**( வாஸ் கூஞ்ஞ)**

பழையனதை கலைந்து புதியன புகுதல் என்ற நிலையில் 2023 ஆம் ஆண்டு புதுவருடத்தின் ஆரம்ப நாளில் அரச அதிகாரிகள் ஊழியர்கள் கடமைப்பொறுப்பேற்கும் நிகழ்வு நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற நிலையில் மன்னார் மாவட்ட செயலகத்திலும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் திங்கள் கிழமை (02.01.2023) மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இவ் நிகழ்வில் முதல் நிகழ்வாக அரசாங்க அதிபர் தேசிய கொடியை ஏற்றிவைத்தார்.

இதைத் தொடர்ந்து மங்கள விளக்குகள் பதவிநிலை அதிகாரிகளால் ஏற்றப்பட்டன.

அத்துடன் மும்மத பிராத்தனைகள் இடம் பெற்றதைத் தொடர்ந்து விஷேட சத்தியப் பிரமாண நிகழ்வு நடைபெற்றது.

இதனையடுத்து அரச அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தனது சிறிய உரையில் கடந்த காலத்தில் பல சிரமங்கள் இருந்தபோதும் மாவட்ட செயலகத்தில் கடமைபுரிந்த யாவரும் சிறந்த முறையில் உங்கள் கடமைகளை செய்தமைக்கு நன்றி நிவிழ்கின்றேன் எனவும்

இவ்வருடம் கடமைகள் செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை காணப்படுவதால் நாம் யாவரும் மக்களுக்கு அர்ப்பணிப்புடன் எமது கடமைகளை செய்ய வேண்டும் என்ற உறுதிப்பாட்டைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும் எனவும் வேண்டிக் கொண்டார்.

இதைத் தொடர்ந்து புதுவருடத்துக்கான கைவளங்கல் வெற்றிலையில் வைத்து வழங்கப்பட்ட நிகழ்வும் இடம்பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சத்தியப்பிரமாண நிகழ்வு: கல்முனை மாநகர சபை





புதிய ஆண்டின் அலுவலகப் பணிகளை ஆரம்பிக்கும் அரச சேவை சத்தியப்பிரமாண நிகழ்வு திங்கட்கிழமை (02) கல்முனை மாநகர சபையில், மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் இடம் பெற்றபோது பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், கணக்காளர் கே.எம்.றியாஸ், பொறியியலாளர் ஏ.ஜே.ஹலீம் ஜௌஸி, கால்நடை வைத்திய அதிகாரி என்.ஏ.வட்டபொல, வேலைகள் அத்தியட்சகர் வி.உதயகுமரன், உள்ளூராட்சி உத்தியோகத்தர் ஏ.எஸ்.எம்.நௌசாத் உட்பட உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டிருப்பதைக் காணலாம்.

**(படம்: எம்.எம்.அஸ்லம்)**

## இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் தலைமையில் அமரர் பி.சந்திரசேகரனின் 13வது சிரார்த்த தினம்











**தலவாக்கலை பி.கேதீஸ்**

மலையக மக்கள் முன்னணியின் முன்னாள் தலைவரும் முன்னாள் அமைச்சருமான அமரர் பி.சந்திரசேகரனின் 13வது சிரார்த்த தினம் தலவாக்கலை கதிரேசன் ஆலய மண்டபத்தில் ஐக்கிய மக்கள் முன்னணி மற்றும் ஐக்கிய தொழிலாளர் முன்னணியின் தலைவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான அருணாச்சலம் அரவிந்தகுமார் தலைமையில் நேற்று முன் தினம் (1) அனுஷ்டிக்கப்பட்டது.

# ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திலும் சத்தியப்பிரமாண நிகழ்வுகள்:

## உணவு உற்பத்தியினை ஊக்குவித்தலும் வறுமையில் இருந்து மக்களை மீட்டெடுத்தலும் என்பதாக 2023 இன் இலக்கு அமைந்துள்ளது

## பிரதேச செயலாளர் வி. பபாகரன்

(வி.சுகிர்தகுமார் )

அரச அலுவலகங்களில் 2023ஆம் ஆண்டு கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வுகள் நேற்று காலை 9.00 மணிக்கு இடம்பெற்றன.

அம்பாரை மாவட்டம் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திலும் பிரதேச செயலாளர் வி.பபாகரன்; தலைமையில் பூஜை வழிபாடுகள்;, மற்றும் சத்தியப்பிரமாண நிகழ்வுகள்;





கடமைகளை ஆரம்பித்தல் என பல்வேறுபட்ட கடமைகளும் நிறைவேற்றப்பட்டன.

மகாகணபதி ஆலயத்தில் இடம்பெற்ற பூஜை வழிபாடுகளை தொடர்ந்து பிரதேச செயலகத்தில் தேசிய கொடியினை பிரதேச செயலாளர் ஏற்றி வைத்துடன்; தேசிய கீதமும் இசைக்கப்பட்டது.

தொடர்ந்து சர்வமத பிரார்த்தனைகள் இடம்பெற்றதன் பின்னர் நாட்டிற்காக உயிர்நீத்த படைவீரர்கள் உள்ளிட்ட அனைவரின் நினைவாக இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன் பின்னராக சத்தியபிரமாண உறுதிமொழியை நிருவாக உத்தியோகத்தர் க.சோபிதா வாசிக்க உத்தியோகத்தர்கள் சத்தியப்பிரமாணத்தை எடுத்துக்கொண்டனர்.

நிறைவாக பிரதேச செயலாளரினால் விசேட உரையும் வழங்கப்பட்டது.

அவரது உரையில் நமது நாட்டின் தற்போதய பிரதான கொள்கையாக உணவு உற்பத்தியினை ஊக்குவித்தலும் வறுமையில் இருந்து மக்களை மீட்டெடுத்தலும் என்பதாக 2023 இன் இலக்கு அமைந்துள்ளது. வறுமையின் காரணமாக தனிநபரேனும் உணவில்லாமல் இருப்பாராக இருந்தால் அதற்கு பொறுப்புடையவர்களாக அரச உத்தியோகத்தர்கள் இருப்பார்கள் என அதிமேதகு ஜனாதிபதியின் உரையில் கூறப்பட்டது.

அந்த வகையில் நமது சகல வளமுள்ள பிரதேசத்தில் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். இருக்கும் நிலத்தை அதிகரிக்க முடியாது. ஆனால் உற்பத்தியை அதிகரிக்க முடியும். ஆகவே வீட்டுக்கு வீடு வீட்டுத்தோட்டங்களை உருவாக்கி உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்றார்.

# அரச வளங்களை துஷ்பிரயோகம் செய்யாது வினைத்திறன் உள்ள முறையில் பயன்படுத்தி நாட்டின் அபிவிருத்திக்கு வலு சேர்க்கும் வகையில் திடசங்கற்பம் பூண வேண்டும்





(ஹஸ்பர்)



அரச வளங்களை துஷ்பிரயோகம் செய்யாது வினைத்திறன் உள்ள முறையில் பயன்படுத்தி நாட்டின் அபிவிருத்திக்கு வலு சேர்க்கும் வகையில் திடசங்கற்பம் பூணுமாறு திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ் தெரிவித்தார்.

2023 அரச கடமைச்செயற்பாடுகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று (02)மாவட்ட செயலகத்தில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடு தற்போது பொருளாதார ரீதியாக பல சவால்களை முகங்கொடுக்கின்றது. குறித்த சவால்களை வெற்றி கொள்ளும் வகையில் செயற்பாடுகளை முன்னெடுத்தல் வேண்டும். அரசாங்க சேவை உத்தியோகத்தர்களாகிய நாம் கடந்த வருடத்தில் விட்ட தவறுகள், பிழைகளை நிவர்த்தி செய்து மக்கள் சேவையை செவ்வனே செய்பவர்களாக எம்மை மாற்றிக்கொள்ள வேண்டும். எம்மால் அரச சேவைக்கு சிறிய நட்டமோ, இழுக்கோ ஏற்படாதவகையில் செயற்படுமாறும் அரசாங்கம் உணவு பாதுகாப்பு குறித்து வேலைத்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தி வருவதாகவும் அதன் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள உயர்ந்தபட்சபங்களிப்பினைவழங்குமாறும் வேண்டிக்கொண்டார்.

தேசிய கொடியேற்றப்பட்டு தேசிய கீதம் பாடப்பட்டதுன் அரச சேவை சத்தியப்பிரமாணம் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளிலும் உத்தியோகத்தர்களால் செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர்( காணி) எஸ்.சுதாகரன், மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், திணைக்கள தலைவர்கள் உள்ளிட்ட சக பணிக்குழாத்தினரும் கலந்து கொண்டனர்.

# கிழக்கு மாகாணத்தின் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளராக புவனேந்திரன் நியமனம்

(காரைதீவு சகா)



கல்முனை வலய கல்வி பணிப்பாளராக இருந்த செல்லத்துரை புவனேந்திரன் கிழக்கு மாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை கல்வி நிருவாக சேவை தரம்1 அதிகாரியான செல்லத்துரை புவனேந்திரனுக்கான நியமனக்கடிதம் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்டுள்ளது.

காரைதீவைச்சேர்ந்த இவர் ,2009.09.09 இல் காரைதீவு விபுலாநந்த மத்திய கல்லூரியில் ஆசிரிய நியமனம்பெற்றதுடன் கல்விச்சேவையில் இணைந்துகொண்டார்.

அரச சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்தின்படி இலங்கை கல்வி நிருவாக சேவையின் முதலாம் வகுப்புக்கு 2021.03.23 முதல் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவர் 2009 இல் இலங்கை கல்வி நிருவாக சேவையில் இணைந்து கல்முனை கல்வி வலயத்தில் கடமையாற்றிய பின்னர் ,2010 முதல் 2018 வரை சம்மாந்துறை கல்வி வலயத்தில் கல்வி அபிவிருத்தி திட்டமிடல்நிர்வாகம் போன்ற பிரிவுகளில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி, 2019 இல் மீண்டும் கல்முனை வலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்று 2020.04.16 முதல் கல்முனை கல்வி வலயத்தின் வலயக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வந்தார் .

இவர் ஆரம்பக்கல்வியை காரைதீவு இ.கி.மிசன் ஆண்கள் பாடசாலையிலும் ,இடைநிலைக்கல்வியை விபுலாநந்த மத்தியகல்லூரியிலும் ,கல்முனை பற்றிமா தேசியகல்லூரியிலும் பயின்று, கிழக்கு பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப்பட்டதாரியாகி ,பிரான்சில் தனது கல்வித்திட்டமிடல் மற்றும் முகாமைத்துவத்தில் முதுநிலை மாணி பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

இவர் நாளை மறுதினம் (4) புதன்கிழமை திருகோணமலை கிழக்கு மாகாண கல்வி திணைக்களத்தில் கடமையை பொறுப்பேற்கவிருக்கிறார்.

# நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் பசுப் பால் வழங்கி முதல் நாள் கடமையை பொறுப்பேற்கும் நிகழ்வு







( ஏ.எல்.எம்.ஷினாஸ்)

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள் புதியதோர் ஆண்டின் ஆரம்பத்தினை உருவாக்குவதற்கான அரச சேவை உறுதிமொழி ஏற்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் எஸ் ரங்கநாதன் வழிகாட்டலில் உதவிப்பிரதேசசெயலாளர்பி.பிரணவரூபன் தலைமையில் செயலக வளாகத்தில் நேற்று (02.01.2023) இடம்பெற்றது.

இதன்போது தேசியக்கொடி ஏற்றப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டு நாட்டின் நிரந்தர சமாதானத்திற்காக உயிர்நீத்த படைவீரர்களுக்காக இரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், புதிய ஆண்டுக்கான உத்தியோகத்தர்கள் சத்தியப் பிரமாணமும், கடந்த ஆண்டின் வேலைத்திட்டங்கள்காடசிப்படுத்தப்பட்டு பதவிநிலை உத்தியோகத்தர்களின் விசேட உரையும் இடம்பெற்றது.

இதில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ஆர்.லதாகரன், கணக்காளர் கே.றிஸ்வி யஹ்ஸர், நிருவாக உத்தியோகத்தர் கே.யோகஸ்வரன், சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எஸ் சிவம் உட்பட அலுவலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# சரீரம் நிப்தபதியின் திருப்பாவை உற்சவமும் 33வது ஆண்டு விழாவும், கௌரவிப்பு நிகழ்வும்





(ரக்ஸனா)

சரீரம் நிஷப்தபதி ஸ்ரீலங்கா தேசிய மன்றத்தினால் மட்டக்களப்பு தாளங்குடாவில் அமைந்துள்ள கிருஷ்ணர் ஆலயத்தில் மார்கழி திருப்பாவை உற்சவமும், நிஷப்தபதியின் 33வது ஆண்டு விழா நிகழ்வும் திங்கட்கிழமை(02.01.2023) நடைபெற்றது.

சரீரம் நிஷப்தபதி ஸ்ரீலங்கா தேசிய மன்றத்தின் இஸ்தாபகர் கலாநிதி கர்மயோகி ஆறுமுகம் லோகேஸ்பரன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதலில் கிருஷ்ணர் ஆலயத்தில் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு சங்காபிஷேகம் இட்பெற்றது. மகா விஷ்ணு சமேத சீதேவி, பூதேவிகளுடன் அருள் பாலிக்கும் சரீரம் நிசப்தபதி ஆலயத்தில் சொர்க்க வாசல் திறக்கப்பட்டு விசேட யாக பூசைகளும் இடம்பெற்றன.

இதன்போது மக்களுக்குஅர்ப்பணிப்புடன் ஊடகப் பணியாற்றிவரும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 22தமிழ் மற்றும் முஸ்லிம் ஊடகவியலாளர்கள் விருது வழங்கி கௌரவிக்ககப்பட்டனர். மேலும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரெத்தினம், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் பேராசிரியர் மா.செல்வராசா, மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் புண்ணியமூர்த்திமற்றும் சிவாச்சாரியார்களும், சரீரம் நிஷப்தபதி ஸ்ரீலங்கா தேசிய மன்றத்தினரால் இதன்போது விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன், சமூக சேவையாளர்கள் பலரும் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

இவ்வாலயத்தில் ஆண்டு தோறும் பல்வேறு விழாக்கள் நடைபெற்றாலும் மார்கழி மாதத்தில் நடைபெறும் வைகுண்ட ஏகாதசி விழா சிறப்பு வாய்ந்ததாக பக்தர்களினால் கருதப்பட்டு வருவதானது விசேட அம்சமாகும்.





# மருந்து தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய ஒரு குடும்பத்தின் முன்மாதிரி!

( வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு பிரதேச வைத்தியசாலையில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டை பூர்த்தி செய்யும் வகையில் காரைதீவில் உள்ள ஒரு குடும்பம் ஒரு தொகுதி மருந்து பொருட்களை வழங்கியுள்ளது.

காரைதீவு மார்க்கண்டு(முதலாளி) சமூகஅறக்கட்டளை மூலம் ஒரு தொகுதி மருந்துப் பொருட்கள் புதுவருட தினமான நேற்று முன்தினமட் ஞாயிற்றுக்கிழமை குடும்ப உறுப்பினர்களால் அன்பளிப்பு செய்யப்பட்டது.





இவர்கள் ஒரு லட்ச ரூபாய் பெறுமதியான மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்து அன்பளிப்புச்செய்துள்ளது.

சமுக அறக்கட்டளை பிரதிநிதியான திருமதி மார்க்கண்டு மற்றும் மகன் வித்தியானந்தன் உள்ளிட்ட குழுவினர் நேற்று வைத்தியசாலைக்கு சென்று அதனை வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் நடராஜா அருந்திரனிடம் வழங்கி வைத்தனர்.

மருந்து தட்டுப்பாடு, தொடர்பாக பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் நடராஜா அருந்திரன் உதவும்படி மக்களிடம் பகிரங்கமாக கோரியிருந்தமை தெரிந்ததே.

இதேவேளை ,வைத்திய சாலை மின்பிறப்பாக்கிக்கான எரிபொருளை இதுவரை நான்கு தரப்பினர் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை - 25

# மூத்த வாத்திய இசைக் கலைஞர் கலாபூஷணம் செல்வநாயகம் சசிதரன் கலைஞரின் சாதனைக் கலைப் பயணம்

**ஆதிகால மனிதன் தொட்டு இன்று பிறக்கும் குழந்தை வரைக்கும் இசை என்பது தொப்புள் கொடி பந்தமாக இருந்து வருகின்றது. அவ்வாறான இசை இன்பத்திற்கு மயங்காதவர் யாரும் இருக்க முடியாது. ஒலியின் ஒழுங்கு செய்யப்பட்ட வடிவமாகவே கருதப்படும் இசையில் வாத்திய இசையும் அடங்குகின்றது. இசைக் கச்சேரிகளில் பாடகரின் பாடலை பொலிவு பெறச் செய்வதற்கும், நடனக் கச்சேரிகளில் மேலும் மெருகூட்டுவதற்கும், இசையொலியின் பல நுட்பங்களைத் தெரிந்து கொள்வதற்கும், இசையறிவில் வளர்ந்து இசையின் அழகைத் துய்ப்பதற்கும், சிறப்பாக மொழி கலவாத் தனியிசையின் மேன்மையை உணர்வதற்கும் இவ்வாறாக பல சந்தர்ப்பங்களில் வாத்தியக் கருவிகள் மூலமாக வாத்திய இசையானது மீட்டப்பட்டு வருகிறது. அந்த வகையில், திருக்கோணமலை கிழக்கே கொட்டியாபுரப்பற்றில் உள்ள கட்டைபறிச்சான் கிராமத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகக் கொண்டவரும், வாத்திய இசைத் துறையில் 50 வருடங்களுக்கு மேலாக கலைச் சேவையாற்றி வருபவரான மூத்த வாத்திய இசைக் கலைஞர் கலாபூஷணம் செல்வநாயகம் சசிதரன் கலைஞர் சுபீட்சம் பத்திரிகையின் திருமலை மண்ணின் கலைஞர்கள் ஒரு பார்வை என்ற பகுதிக்கு வழங்கிய செவ்வி காணலை இங்கு காணலாம்.**

**உங்களைப் பற்றிய சிறு அறிமுகம்?**

மூதூர் கிழக்கு பிரதேசத்தின் அழகிய கிராமமான கட்டைபறிச்சான் கிராமத்தில் 1952ஆம் ஆண்டு செல்வநாயகம் கணேசம்மா தம்பதியினருக்கு முதல் மகனாக நான் பிறந்தேன்.

**? இசைத் துறையில் உங்களுக்கு ஏற்பட்ட ஆர்வம் குறித்தும், அதன் ஊடான பயணம் குறித்தும்?**

எனது தந்தையார் கூத்து, நாடகம் போன்றவற்றில் ஆர்வமுள்ள ஒரு கலைஞராக இருந்தது மட்டுமல்லாது நடிகராகவும் இருந்தார். அத்துடன் ஹார்மோனியம், புல்லாங்குழல், மத்தளம் போன்ற இசைக் கருவிகளையும் வாசித்து வந்தார். இற்றைக்கு சுமார் 70 வருடங்களுக்கு முன்னர் அவர் கலைஞராக இருந்ததோடு ‘கலைவாணி’ என்ற பெயரில் இசைக்கழகம் ஒன்றினையும் ஆரம்பித்தார். இசை மீதான தீராக் காதல் காரணமாக என்னையும் ஒரு இசைக் கலைஞனாக மாற்ற வேண்டும் என்ற முனைப்புடன் செயற்பட்டார். அதன் விளைவாக எனக்கு பத்து வயதிலிருந்தே என்னைப் பாட வைப்பதற்கான பயிற்சிகளைத் தந்ததோடு வாத்தியக் கருவிகளை இசைப்பதற்கான பயிற்சிகளையும் தந்தார். சிறு வயதிலிருந்தே எனது தந்தையாருடன் இசை நிகழ்வுகளுக்குச் சென்று பாடுவதுடன், வாத்தியங்களை இசைத்தும் எனது இசைக்கான பயணத்தினைத் தொடர்ந்தேன்.

**? எவ் வகையான வாத்தியங்களை இது வரையில் நீங்கள் வாசித்து வருகின்றீர்கள்?**

நான் ஹார்மோனியம், தபேலா, மிருதங்கம், புல்லாங்குழல் போன்ற இசைக்கருவிகளை வாசித்து வருகின்றேன்.

**? உங்களது வாத்திய இசையினை எவ்வாறான சந்தர்ப்பங்களில் மேடையேற்றி வருகின்றீர்கள்?**

எனது தந்தையாரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட ‘கலைவாணி’ இசைக் கழகத்தினை தொடர்ந்து நடாத்தி வரும் நிலையில், பாடசாலைகளின் ஊடாக நடைபெறும் கலை நிகழ்வுகள், பஜனைகள், கோவிலில் இடம்பெறும் விழாக்களில் எனது வாத்திய இசையினைத் தொடர்ந்தும் மேடையேற்றி வருகின்றேன்.

**? உங்களது பல வகையான வாத்தியங்களை மீட்க எங்கு கற்றீர்கள்?**

திருக்கோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் கிராமத்தில் வசித்து வந்த மிருதங்க ஆசிரியரான கோணாமலை சண்முகராசா என்பவரிடம் மூன்று வருடங்களாக மிருதங்கம் பயின்றேன்.

**? உங்கள் வாழ்க்கையில் இசையின் ஊடான பயணம் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்துகிறது?**

எனது இசைத் துறையில் பல்வேறுபட்ட கலைஞர்களின் அறிமுகம் எனக்கு கிடைக்கின்றது. சமூகத்தின் மத்தியில் நன் மதிப்பும், வரவேற்பும் அதிகரிக்கின்றது. சமூக ஆர்வலர்கள், கல்விமான்கள், அறிஞர்கள் போன்றோரின் அறிமுகம் கிடைப்பதோடு அவர்களுக்கு இடையிலான நட்பு வட்டம் விரிவடைகின்றது. இந்த இசைப் பயணம் மனநிறைவையும், உற்சாகத்தையும் எனக்கு தருவதோடு மகிழ்ச்சியினையும் தருகின்றது.





தொகுப்பு :-
திருமலை தட்சாயினி ஞானசங்கரன்

**? மூத்த இசைக் கலைஞராக பாரம்பரிய இசையினை வளர்ப்பதில் எவ்வாறான முயற்சிகளையும், செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகிறீர்கள்?**

இசைத்துறையில் ஆர்வமுள்ளவர்களை இனங்கண்டு அவர்களை பஜனைப் பயிற்சியில் ஈடுபடுத்தியுள்ளேன். எமது கிராமத்தில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களை பயிற்சியில் ஈடுபடுத்தியுள்ளேன். எனது பிள்ளைகளையும் கீபோர்ட், மிருதங்கம் போன்ற இசைக்கருவிகளை வாசிக்க கற்றுத் தந்ததோடு, உயர்தர மாணவர்களில் சங்கீதம் பயிலும் மாணவர்களுக்கான செயன்முறைப் பரீட்சைக்கான பயிற்சிகளையும், முன் ஆயத்தத்தினையும் எனது மகன் மூலமாக செயற்படுத்தி வருகின்றேன்.

**? நீங்கள் வாழும் பிரதேசத்தில் உங்கள் கலைக்கான வரவேற்பு எவ்வாறு உள்ளது?**

மக்கள் இசைத்துறைக்கு ஆதரவளிக்கின்றனர். மாணவர்கள் பஜனைப் பயிற்சிகள், பாடல் பாடுதல் போன்றவற்றில் ஆர்வம் காட்டுகின்றனர். பாடசாலை நிகழ்வுகள், கலைஞர்கள் கௌரவிப்பு என்ற நிகழ்வினூடாக எனக்கான அங்கீகாரமும், வரவேற்பும் கிடைத்து வருகின்றது.

**? வாத்தியங்களை வாசிக்கும் போது நீங்கள் உணரும் கடினமான விடயம்?**

இதுவரை எவற்றையும் கடினமான விடயங்களாக நான் கருதவில்லை. அப்படி கடினமாகத் தென்பட்டாலும் அதனை நான் சவாலாக எதிர்கொண்டு வாசித்து வருகின்றேன்.

**? இசைத்துறையில் உங்கள் குடும்பத்தின் பங்களிப்பு?**

இசை நிகழ்வுகளின் போது எனது பிள்ளைகள் என்னுடன் இணைந்து வாத்தியங்களை இசைத்து எனக்கு உறுதுணையாக இருக்கின்றார்கள். எனது குடும்பத்தினரின் ஆதரவும் எனக்கு கிடைக்கின்றது.

**? உங்களது இசைத் திறமையை வாத்திய இசைத்துறையில் ஆர்வமுள்ளவர்களுக்கு பயிற்சியளித்து வரும் சந்தர்ப்பம் ஏதேனும் உண்டா?**

ஆம். இருவருக்கு வாத்திய இசைக்கருவிகளை இசைக்கக் கற்பித்திருக்கின்றேன். இனிவரும் காலங்களில் இசைத் துறையில் ஆர்வமுள்ளவர்களுக்கு பயிற்சியளிக்கவும் உள்ளேன்.

**? உங்களது இசைக் கலை மூலம் திருக்கோணமலை மாவட்டத்தில் எவ்வாறான கலைச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றீர்கள்?**

திருக்கோணமலை மாவட்டத்தில் கலாசார நிகழ்வுகள் நிலாவெளி பிரதேசத்தில் மற்றும் சாம்பல் தீவு சல்லியம்மன் கோயிலில் எங்கள் கழகத்தினருடன் இணைந்து இசை நிகழ்வுகளையும் மேற்கொண்டுள்ளேன். அத்துடன் மூதூர் பகுதியிலும் எமது கலைச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறேன்.

**? இன்றைய சூழலில் பாரம்பரிய வாத்திய இசைக்கருவிகளுக்கான அடையாளம் எவ்வாறு உள்ளது?**

பாரம்பரிய வாத்திய இசைக் கருவிகளைப் பொறுத்தவரை, அதனைப் பயிலும் ஆர்வம் பலர் மத்தியிலும் அருகி வருகின்றதென்றே சொல்லலாம். எம்மைப் போன்ற மூத்த கலைஞர்கள் ஒரு சிலர் மாத்திரமே அந்த இசைக்கருவிகளை இன்று வரை வாசித்து வருகின்றனர்.



**? இசைத்துறையில் இன்று பலரின் வருகையும், ஈடுபாடும் எவ்வாறு உள்ளது?**

இசைத்துறையில் பலருக்கு ஈடுபாடு இருந்தபோதிலும் அதனை முனைப்புடன் செயற்படுத்தும் திறன், வாத்திய இசைக்கருவிகளைப் பயிலும் ஆர்வம், பாடல்கள் பாடுவதிலுள்ள ஆர்வம் அருகி வருகின்றதென்றே கூறலாம். சிலர் இசைக்கருவிகளை வாசிப்பதற்கும், இசை நிகழ்வுகளில் கலந்து கொள்வதிலும் தயக்கம் காட்டி வருகின்றனர்.

**? இதுவரையில் இத்துறையில் உங்களுக்கு கிடைத்த வெற்றிகள், விருதுகள் குறித்து?**

அரசவிருது வழங்கல் விழாவின் 32 ஆவது கலாபூஷணம் அரச விருது வழங்கல் நிகழ்வின் 2016ஆம் ஆண்டு ‘கலாபூஷணம்’விருதினைப் பெற்றேன். 2018ஆம் ஆண்டு கிழக்கு மாகாண இலக்கிய விழாவில் ‘வித்தகர் விருது’ வழங்கப்பட்டது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான அமரர்.துரைரெட்ணசிங்கம் அவர்களினால் கௌரவிப்பும் இடம்பெற்றது.

**? வாத்தியங்களை வாசிப்பவரன்றி பாடல் பாடும் திறமையும் உங்களுக்கு உள்ளதா?**

ஆம். பாடல்கள், பஜனைப் பாடல்கள் போன்றவற்றையும் பாடுவேன்.

**? ஒரு கலைஞராக மட்டுமின்றி சமூக செயற்பாடுகள் குறித்து?**

சமூகத்தில் அங்கம் வகிக்கின்ற எந்தவொரு நிகழ்வாக இருந்தாலும் அந்த நிகழ்வுகளில் ஒன்றிணைந்து செயற்பட்டு வருகிறேன். கிராமத்தில் பாடசாலைகள், வீதி அபிவிருத்தி போன்றவற்றின் வளர்ச்சிகளில் ஆர்வம் காட்டுவதுடன், என்னால் இயன்ற பங்களிப்பினையும் செய்து வருகின்றேன்.

**? நிறைவாக, சுபீட்சம் வாசகர்களுக்காக நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

இசை என்பது பெருங்கடல். அதில் சிறு துளியினையாவது கற்றறிந்த வகையில் நான் சுபீட்சம் வாசகர்களுக்கு கூறுவது யாதெனில், அருகிவரும் பாரம்பரியக் கலைகளினையும், இசைக்கருவிகளையும் அழியவிடாது அதனைக் கற்பதுடன், அதனைக் கற்றறிந்தவர்கள் ஆர்வமுள்ள அனைவருக்கும் அதனைக் கற்பித்து இசையினை மேலோங்கச் செய்ய வேண்டும். மென்மேலும் திறமையான கலைஞர்களை உருவாக்கி அவர்களை வெளியுலகிற்கு கொண்டு வர வேண்டும். இது இளந்தலைமுறையினரின் கடமையாகும். என்னை, என் இசைக் கலையை வெளி உலகிற்கு கொண்டு வர முன்வந்த சுபீட்சம் பத்திரிகை துறையினருக்கு எனது நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நன்றி!**
**இவ்வாறாக நம் திருக்கோணமலை மண்ணிற்கு தனது வாத்திய இசைத்துறை மூலம் பெருமையையும், புகழையும் பெற்றுத் தந்து இன்றும் கலைச் சேவையாற்றி வரும் இக் கலைஞர் மென்மேலும் வாத்திய இசைத் துறையில் பல வெற்றிச் சாதனைகளைப் பெறுவதற்கு நீண்ட ஆயுளையும், தேகாரோக்கியத்தையும் பெற வேண்டும் எனப் பிரார்த்திப்பதோடு கலைஞரின் இசைப் பயணம் தொடர மனதார வாழ்த்துகின்றேன்.**
**தொடரும்....**
**கலைஞர்களுக்கான தேடலின் பயணத்தோடு**
**திருமலை தட்சாயினி ஞானசங்கரன்.**

